**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 152/2021 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி. தமிழரசி |
| Father's Name/Husband Name: | திரு. ராமநாதன் |
| Village : | தழுதாழை |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 60 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 02.12.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. லட்சுமணபெருமாள் , இளநிலை உதவியார் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 2 ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 09.08.2021 அன்று தழுதாழையில் உள்ள எங்களுக்கு சொந்தமான வயல்காட்டில் நானும் என் கணவர் ராமநாதன் என்பவரும் மதியம் 1.30 மணியளவில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தோம். அப்போது எதிரிகள் இருவரும் அவர்களுடைய காட்டில் உழவு பணி மாடு கட்டி விவசாய இயந்திரம் மூலமாக சோளம் விதைத்தார்கள் அப்போது எங்கள் வயலில் இரண்டு அடி உயரம் வளர்ந்திருந்த சோளப்பயிர் மீது எதிரிகள் மாடு மற்றும் இயந்திரம் மூலமாக மேலே வந்ததில் எங்கள் வயலில் வளர்ந்திருந்த சோளைப்பயிர் உடைந்துவிட்டது. எங்கள் காட்டில் விட வேண்டாம் என்று சொல்லி 2ம் எதிரியிடம் சொன்ன போது அங்கு ஓடிவந்த 1ம் எதிரி என்னை தேவிடியா என்று சொல்லி அப்படித் தான் பண்ணுவோம் என்று சொல்லி என்னுடைய தலைமுடியை பிடித்து 1ம் எதிரி இழுத்து அடித்தார். அப்போது என் கணவர் வந்து சம்பவத்தை பார்த்து பிறித்து

விடுவே ராஜ்குமார் சவுக்கை எடுத்து தலை மற்றும் உடம்பு பகுதியில் பட்டது. புடவை கிழிந்து போய்விட்டது. என்னுடைய இரண்டு மணிக்கட்டு பகுதியிலும் காயம் ஏற்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டது. என் கணவரையும் ராஜ்குமார் கட்டையால் அடித்தார். என்னடி நடித்துக் கொண்டிருக்கிறாய் என்று கொச்ச வார்த்தை சொல்லி அசிங்கமாக பேசினார் அப்போது சத்தம் கேட்டு அங்கு வந்த நபர்கள் வந்தார்கள். என்னை எதிரி என்றைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று கட்டையால் வைத்து மிரட்டினார். அங்கு வந்த நபர்கள் என்னை தூக்கி புடவையை சரிசெய்து என் கணவரையும் தூக்கிவிட்டு பின்னர் என் மகன் சபரிநாதனுக்கும் மற்றும் 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொன்னார்கள். பின்னர் 108 ஆம்புலன்சு மூலமாக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சிகிச்சையிலிருந்த போது போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று இரண்டு கையிலும் காயமாக இருந்ததால் கைரேகை பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் மற்றும் கைரேகையும் என்னுடையது தான். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 8-9 நாட்கள் சிகிச்சையிலிருந்து வீட்டுக்கு வந்த பின்னர் தொடர் சிகிச்சை எடுத்துக் கொண்டேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் ராஜ்குமார், ஜெயக்கோடி எனது உறவினர்கள் என்றால் சரிதான். வீட்டிற்கு வரும் பாதை சம்மந்தமாக எதிரிகளுக்கும் எங்களுக்கும் முன் விரோதம் இருக்கிறது என்றால் சரிதான். எனது காட்டில் பயிரிடப்பட்ட சோளப்பயிர் மாட்டிற்கு விதைக்கிற சோளம் என்றால் சரிதான். எனது வயலில் சோளப்பயிர் தண்ணீர் விட்டு பயிர் செய்துள்ளேன். எதிரிகளின் நிலம் மானவாரி நிலம். எதிரிகளின் நிலத்திலும் மாட்டிற்கு விதைக்கும் தீவன சோளப்பயிர் தான் விதைத்தார்கள். எதிரிகள் மாட்டுக் கலப்பையினால் தான் சோளப்பயிர் விதைத்தார்கள். எதிரி ஜெயக்கொடி எதிரிகளின் நிலத்தை தாண்டி உள்ள பக்கத்து நிலத்தில் சமாதியில் உட்கார்ந்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். எதிரி ராஜ்குமார் எனது வயலின் அருகே ஓட்டி வரும்போது மாடு தவறி எனது வயலில் மேய்ந்துவிட்டது என்றால் சரியல்ல. எந்த ஒரு விவசாயியும் பயிரிடப்பட்ட நிலத்தை நாசம் செய்யும் நோக்கத்தில் செயல்படமாட்டார் என்றால் சரியல்ல. எதிரிகள் உண்மையிலேயே பயிரை சேதப்படுத்தி இருந்தால் நான் காவல் நிலத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது கணவர் தான் எதிரி

ராஜ்குமாரைப் பார்த்து எதற்காக வண்டியை வரப்பு ஒட்டி ஓரமாக ஓட்டிக் கொண்டு வருகிறாய் என்று கேட்டார் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி ராஜ்குமார் என் கணவரைப் பார்த்து ஏன் மாமா கோவித்துக் கொள்கிறீர்கள் எனது வயலில் உள்ள 2 கட்டு சோளப்பயிரை அறுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் 1ம் எதிரி ஜெயக்கொடியிடம் போனவருடம் சோளப்பயிரை நாசம் செய்து விட்டுதாக தகாத வார்த்தைகளால் பேசினியே இப்ப உங்க மாடு எங்க சோளப்பயிரை கடிச்சிடுச்சே என்று கேட்டு தகாத வார்த்தைகளால் பேசினார் என்றால் சரியல்ல. இதன் காரணமாக தான் 1ம் எதிரி ஜெயக்கொடி தூரமாக உட்கார்ந்திருந்தவர் வந்து எதற்காக இப்படி பேசுகிறாய் என்று கேட்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் ஜெயக்கொடியை அடிக்க செல்லும்போது நான் ஜெயக்கொடியின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. எனது கணவர் ஜெயக்கொடியின் கன்னத்தில் அறைந்து விட்டார் என்றால் சரியல்ல. எதிரி ராஜ்குமார் உழவு ஓட்டிக் கொண்டிருந்த நபர் சம்பவத்தை பார்த்து தான் அதை தடுக்க என்னை தள்ளிவிட்டார் என்றால் சரிதான் ஆனால் என்னை அடித்து தள்ளினார். நான் பின்பக்கமாக விழுந்ததால் எனக்கு மணிக்கட்டில் சுளுக்கு ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. நான் கீழே விழுந்ததைப் பார்த்து தான் அருகே உள்ள சாந்தி என்பவர் வந்தார் என்றால் சரிதான். அவர் 108 ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவித்து அதன் மூலம் நான் ஆம்புலன்சில் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக் சென்றேன் என்றால் சரிதான். எனது புகாரில் சாந்திக்கு இந்த விவரம் தெரியும் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பக்கத்து காட்டில் உள்ளவர்களின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பக்கத்து காட்டில் இருந்து யாரெல்லாம் வந்தார்கள் என்ற விவரம் காவல் நிலையத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தார் பக்கத்து காட்டிலிருந்து யாரெல்லாம் வந்திருப்பார்கள் என்ற விவரம் தெரிந்திருக்கும் என்றாலும சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் தான் எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. எனது கணவர் 1ம் எதிரி ஜெயக்கொடியை அடிக்கும்பொழுது நான் ஜெயக்கொடியின் கைகளை பிடிக்காமல் இருந்திருந்தால் எதிரி ராஜ்குமார் என்பவர் விலக்குவதற்காக என்னை பிடித்து தள்ளியிருக்க மாட்டார் என்றால் சரியல்ல. அரசு

மருத்துவமனையில் 09.08.2021 லிருந்து 12.08.2021 வரைக்கும் தான் நான் சிகிச்சையிலிருந்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் இருவரும் எந்த ஒரு தவறும் செய்யவில்லை என்றாலும் நானும் எனது கணவரும் தான் பிரச்சனை செய்தோம் என்றாலும் சரியல்ல. மேற்கண்ட சம்பவம் குறித்து எதிரிகளும் அரும்பாவூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் மருத்துவமனையில் இருந்ததால் தான் எனது வழக்கை போலிசார் எடுத்துக் கொண்டார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்ற மறுநாள் காலையில் வந்து விசாரித்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.